பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 15] சென்னை: வைகாசி 19 (1—6—68 சனி ★ வெளியூர்: வைகாசி 20 (2—6—68) ஞாயிறு [இதழ்: 292

வியட்நாம் வாங்கும் காவு!

சைகோன், மே 31—
வியட்நாம் போரில் கடந்த மூன்று வாரங்களில் அமெரிக்காவைச் சார்ந்த 24 000-பேர் கொல்லப்பட்டிருக்கின்றனர். 1,22,000-பேர் காயமடைந்துள்ளனர்.

கடந்த வாரத்தில் 2,500 வியட்காங் வீரர்களும், வட வியட்நாமியரும் கொல்லப்பட்டிருப்பதாக அமெரிக்க அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

விலைக் குறைப்பில் கழக ஆட்சி காணும் வெற்றி

செயற்கை விலையேற்றம் முறியடிக்கப்பட்டது

அரிசி விலையைத் தொடர்ந்து மற்ற விலைகளும் வீழ்ச்சி

சென்னை, மே 31—
காங்கிரசு ஆட்சிக் காலத்தில் ஏழைகள் எட்டிப்பிடிக்க முடியாத அளவுக்கு ஏறியிருந்த விலைவாசிகளைக் குறைக்க, கழக ஆட்சி பதவியேற்றவுடன் பல வகையிலும் முயற்சிகளை மேற்கொண்டது.

அந்த முயற்சிகளின் ஒருகூறுதான் 'ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி' என்ற திட்டம் செயல்படுத்தப்பட்டது.

அரிசியின் விலையைக் குறைத்தால், பிறகு பிற பண்டங்களின் விலைகளும் தாமே குறைந்துவிடும் என்ற பொருளாதாரக் கண்ணோட்டத்துடன்தான் படியரிசித் திட்டம் உருவாயிற்று.

விலை ஏற்றத்துக்கு உற்பத்திப் பற்றாக்குறை ஓரளவு காரணமாக இருந்தபோதிலும், பதுக்கல், கள்ளச் சந்தை போன்ற செயற்கைக் காரணங்கள்தான் மிகுதியாகும். இதனை உணர்ந்த கழக ஆட்சி, ஒருபுறத்தில் உணவு உற்பத்தியைப் பெருக்கும் வகையில் தீவிரச் சாகுபடி முறைகளையும், உழவர்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் பல்வேறு உதவித் திட்டங்களையும் செயல்படுத்தியதுடன் பதுக்கல் கள்ளக்கடத்தல் போன்ற சமூக விரோதச் செயல்களைத் தடுக்கும் வகையிலும் தீவிரமான நடவடிக்கைகளை மேற்கொண்டது.

சிறிய நிலவுடைமைக்காரர்களைப் பாதிக்காத வகையிலும், அதே நேரத்தில் கெடுபிடி எதுவும் இல்லாமலும் கொள்முதல் கொள்கையை வகுத்துக்கொண்டு தீவிரமாகச் செயல்பட்டதன் பலனாக, நிர்ணயிக்கப்பட்ட அளவுக்குக் கொள்முதலிலும் அரசு வெற்றி கண்டிருக்கிறது.

இன்றையத் தமிழக அரசு, கடந்த ஓராண்டுக் காலமாக மேற்கொண்ட இந்த நடவடிக்கைகளின் விளைவாக, கடந்த சில திங்களாகவே விலைவாசிகள் இறங்குமுகமாக உள்ளன; குறிப்பாக அரிசி, புளி, மிளகாய், பருப்பு வகைகள், எண்ணெய் வகைகள் எல்லாம் சென்ற ஆண்டைக் காட்டிலும் மிகவும் விலை குறைந்துள்ளன.

விலைவாசிக் குறைப்பு முயற்சியில் தமிழக அரசு குறிப்பிடத்தக்க வெற்றியைப் பெற்றுவருவதை மக்களும் உணர்ந்து பாராட்டிவருகின்றனர்.

சென்னை ஓட்டல்களில் விலைக் குறைப்பு

சென்னை நகர ஓட்டல் உரிமையாளர்கள் சங்கம், சிற்றுண்டி … களின் விலைகளைக் குறைக்க முடிவு செய்துள்ளது.

மேலும், இட்டிலியின் பருமனை … ல் அதிபர் … ருப்பதாக … தெரிவி…

… ஓட்டல் … னவே விலை … பட்டுவிட்டதாக … ல்களிலும் விரை … குறைப்பு செயல் … என்று நம்புவதாக … காரி கூறினர்.

…ணவுப் பண்டங்களின் விலைகள் குறைந்திருப்பதன் காரணமாக, ஓட்டல்களிலும் விலைகளைக் குறைக்கவேண்டும் என்று உணவு அமைச்சர் திரு கே. ஏ. மதியழகன் ஓட்டல் உரிமையாளர்களைக் கேட்டுக் கொண்டிருந்தார்: அதன் பலனாகவே ஓட்டல் உரிமையாளர்கள் இவ்விலைக் குறைப்புக்கு முன்வந்திருக்கின்றனர்.

சாப்பாட்டு விலையைப் பொறுத்தவரை இப்போதே சில பெரிய ஓட்டல்களில் அளவுச் சாப்பாடு 80 காசு விலைக்குப் போடப்பட்டு கிறது.

காபி விலையைக் குறைப்பதில் சில சங்கடங்கள் இருப்பதாக ஓட்டல்காரர்கள் கூறுகின்றனர்.

அந்தந்த மாவட்டத்திலும், ஓட்டல் பண்ட விலைகளைக் குறைப்பதற்கு ஆவன செய்யுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்களை அரசு கேட்டுக்கொண்டிருக்கிறது.

'இந்திப் பிரசார சபா'க்களுக்கு நிதியுதவியாம்

…ல்லி, மே 31—

… வழங்கும் ம…

… உதவி கோரி அனுப்பப்படும் மனுக்களை ஆகஸ்டு முதல் தேதிக்குள் அனுப்புமாறு மத்திய கல்வித் துறை அமைச்சகம் கேட்டுக் கொண்டிருக்கிறது.

அரிசி விலை இறங்குமுகமாகிறது!

கழக ஆட்சியின் முயற்சி கைமேல் தரும் பலன்

ஈரோடு, ஜூன் 1—
தமிழகத்தில் உணவு உற்பத்தியைப் பெருக்கவும், விலைவாசிகள் குறைவதற்கும் கழக அரசு முயற்சி செய்துவருவதன் விளைவாக, அரிசி விலை குறையத் தொடங்கியிருக்கிறது.

ஈரோடில், கடந்த ஒரு வாரத்திற்கு முன் விற்றதைவிட இப்போது அரிசியின் விலை இறங்கியிருக்கிறது.

முன்பு நல்ல ரக அரிசி மூட்டை ஒன்றுக்கு (100 லிட்டர்) ரூ. 115 முதல் ரூ 125-வரையில் விற்று வந்தது; இப்போது ரூ. 110-ஆகக் குறைந்தது

இரண்டாவது ரக அரிசி முன்பு ரூ. 105-ஆக விற்றது; இப்போது 100-ஆகக் குறைந்திருக்கிறது.

மூன்றும் ரக அரிசி ரூ. 100-ஆகவும், அதற்கும் குறைவாகவும் விற்கப்படுகிறது.

பிரெஞ்சுத் தலைநகரில் இராணுவ நடமாட்டம்

நெருக்கடியைச் சமாளிக்க …கால் ஏற்பாடு

பாரிஸ், மே 31—
பிரான்சில் நாடு முழுவதிலும் நடைபெறும் வேலைநிறுத்தத்தின் விளைவாக வாராந்திர உற்பத்தி இழப்பு சுமார் ரூ.760 கோடியாகும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

நெருக்கடி நிலை ஏற்பட்ட பின், பிரான்சில் இப்போது பாரிஸ் நகரைச் சுற்றிலும் இராணுவ நடமாட்டம் காணப்படுகிறது.

மேற்கு ஜெர்மனியிலிருந்து இரண்டு பிரெஞ்சு டாங்கிப் படைகளும், தென் மேற்கிலிருந்து இரண்டு கண்காணிப்புப் படைகளும் மிக அமைதியாகப் பாரிஸ் நகருக்குள் கொண்டுவரப்பட்டிருக்கின்றன.

அதிபர் டிகால், பிரெஞ்சு தேசிய சட்டமன்றத்தைக் கலைத்துப் பொதுத் தேர்தலுக்கு உத்தரவிட்டதையடுத்துத் தலைமையமைச்சர் தமது அமைச்சரவையைத் திருத்தியமைத்தார்.

சவால் வீரர்

சுப்பிரமணியனார் பார்வைக்கு:

கழகத்தின் மீதும், கழக ஆட்சியின் மீதும் குற்றஞ்சாட்டும் வகையில் புதுப் புதுப் பிரச்சினைகளை எழுப்பி, கற்பனைக் குற்றச்சாட்டுகளைச் சுமத்தி சவாலுக்குமேல் சவால் விட்டுக்கொண்டிருக்கும் தமிழ்நாடு காங்கிரசுக் கட்சித் தலைவர் திருவாளர் சி. சுப்பிரமணியனார், சென்னை தீ விபத்துக்கள் பற்றியும், அவற்றைப் பற்றிய விசாரணை அறிக்கை வெளியிடப்படாதது பற்றியும் ஒரு புதிய குற்றச்சாட்டை இப்போது எழுப்பியுள்ளார்.

இது பற்றிச் சட்டமன்றத்திலேயே, அவர்கள் கட்சியின் கொறடாவான திருவாளர் விநாயகத்துக்கும்—முதலமைச்சர் அண்ணா அவர்களுக்கும் நடந்த உரையாடலை, சவால் வீரர் சுப்பிரமணியனாருக்கு நினைவுபடுத்துகிறோம்; அது வருமாறு:

விநாயகம்:—"போலீசின் திறமை என்ன ஆயிற்று? தீ விபத்து பற்றிப் புலன் விசாரணை செய்யத்தனியாக அதிகாரிநியமிக்கப் பட்டும் அவருடைய அறிக்கை இன்னும் வந்தபாடில்லையே!"

அண்ணா:—"வழக்கறிஞராகிய உங்களுக்கு இது தெரிந்திருக்க வேண்டும். இந்தத் தீவிபத்து பற்றித் தொடரப்பட்ட வழக்குகள் அப்பீலில் உள்ளன. இதனால் எப்படி அறிக்கை அளிக்க முடியும்?"

விநாயகம்:—"சென்னை நகரில் நடந்த தீவிபத்துக்களின் விளைவால் 36 பேரைக் கைது செய்து—2 பேரை மட்டும் வைத்துக்கொண்டு—34 பேரை விடுதலை செய்துவிட்டீர்கள்; அதற்கு என்ன காரணம்?"

அண்ணா:—"நிரபராதிகள் தண்டிக்கப்படக்கூடாது என்பதில் காவல்துறை அவ்வளவு கவனமாக இருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ளலாமே."

கே. விநாயகம்:—"இது, முதலமைச்சரின் பதில் சொல்லும் சாமர்த்தியம்—அவ்வளவுதான்; ஆனால், தீ விபத்துப் பற்றிய புலன் விசாரணையில் அரசு தலையிட்டது உண்மை. 'அரசு' என்பதை, நான் முதலமைச்சரின் உருவத்தில்தான் காண்கிறேன்."

அண்ணா:—இவ்வளவு தூரம் விநாயகம் பேசுவதாலே இன்னொரு முக்கிய உண்மையையும் சொல்லிவிடுகிறேன். நான் அந்தப் புலன் விசாரணையில் தலையிடவே இல்லை; ஆனால், தமிழக அரசியலில் உள்ள மிகப் பெரிய காங்கிரசுக்காரர் ஒருவர்தான் ஒரு போலீசு அதிகாரியிடம் வந்து. விசாரணையில் தலையிடும் வகையில் நடந்துகொண்டார்."

பாலசுப்பிரமணியம் (இடது கம்):—"பிரச்சினை முக்கியமானது என்பதாலே, அந்தக் காங்கிரசுத் தலைவரின் பெயரை இந்த மன்றத்தில் முதலமைச்சர் வெளியிட வேண்டுகிறேன்."

அண்ணா:—"இந்தப் பிரச்சினையில், பெயர் முக்கியமன்று; அவர் செய்த செயல் சராசரி மனிதனின் செய்கைக்கும் கீழான செயல்; அவரோ, தமிழக அரசியலில் காங்கிரசுக் கட்சியில் மிகப் பெரிய இடம் பெற்றிருப்பவர்; எனவே அந்தச் செயலோடு இணைந்த இந்தப் பெயரை இங்கே சொல்ல வேண்டாம் என்றே கருதுகிறேன்."

தென்காசி இடைத் தேர்தல் ஜூலை 3-ல் நடைபெறும்

சென்னை, மே 31
தென்காசி சட்டமன்றத் தொகுதி இடைத் தேர்தல், ஜூலைத் திங்கள் 3-ம் நாள் நடைபெறும்.

வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்படும் நாள்	ஜூன் 8
வேட்பு மனுக்கள் தணிக்கை செய்யப்படும் நாள்	ஜூன் 10
வேட்பு மனுக்களைத் திரும்பப் பெறும் இறுதி நாள்	ஜூன் 12

போட்டியிருந்தால் ஜூலை 3-ம் நாள் வாக்குப் பதிவு நடைபெறும்.

அங்காடிக் கடையினருக்கு ஆணையர் அறிவிப்பு

சென்னை, மே 31—
"நகரில் சாலை முனைகளில், கோடிட்ட இடங்களில் மட்டும் தங்கள் வியாபாரத்தைச் செய்யுமாறு அங்காடிக் கடைக்காரர்களுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது"

என்று சென்னைப் போலீசு கமிஷனர் தெரிவித்திருக்கிறார். மேலும் அவர் கூறியிருப்பதாவது:—

"நடைபாதைகளிலிருந்து அங்காடிக் கடைகளை எடுத்துவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன."

நம்நாடு

ஆசிரியர் : இரா. செழியன்

திருவள்ளுவராண்டு 1999 வைகாசி 19 (1—6—68) சனி

பாட்டீல் அமைச்சரவை

தம்மை முதலமைச்சராகக்கொண்டு வீரேந்திர பாட்டீல் அமைத்திருக்கக்கூடிய மைசூர் அமைச்சரவையில், மொத்தம் 28 அமைச்சர்கள் இடம் பெற்றுள்ளனர். இவ்வமைச்சர்கள் மூன்று வகையினராவர்.

மத்திய அமைச்சரவையில் உள்ளதுபோல்—காபினட், ஸ்டேட், துணை அமைச்சர் என்ற பாகுபாடு பாட்டீல் அமைச்சரவையில் செய்யப்பட்டிருக்கிறது. மைசூர் மாநிலத்துக்கு இம்மூன்று வகையும், இவ்வளவு அமைச்சர்களும் தேவைதானா என்ற கேள்வி எழுவது நியாயமேயாகும்.

அமைச்சர்களின் இந்த எண்ணிக்கை இந்த அளவுடன் நின்றுவிடுமா அல்லது மேலும் கூடுமா என்பது இனித்தான் தெரிய வேண்டும். மேலும் இரண்டொருவரை அமைச்சர்களாக ஏற்றுக்கொள்ள முதலமைச்சர் யோசித்துக்கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

இவ்வளவு அமைச்சர்கள் தேவைப்படக்கூடிய அளவுக்கு மைசூர் மாநிலத்தில் செய்ய வேண்டிய பணிகள் ஒரே இரவில் கூடிவிட்டிருக்க முடியாது. தாம் முதலமைச்சராக ஆவதற்குத் தமக்கு ஆதரவு காட்டிய காங்கிரசு உள்கோஷ்டியைச் சேர்ந்த முன்னோடிகளுக்குச் சலுகை காட்ட வேண்டும் என்ற ஒரே கருத்தில்தான், எண்ணிக்கையில் கூடிய இந்த அமைச்சரவையை பாட்டீல் அமைத்திருக்க வேண்டும்.

அமைச்சர்களின் தொகை அளவுக்கு மிஞ்சி இருப்பதனால், காலதாமதத்துக்கு இடமில்லாமல் அரசாங்கப் பணிகள் உடனுக்குடன் திறம்படச் செயல்படுத்தப்படும் என்பதை நம்புவதற்கில்லை. மேலும், காலதாமதத்துக்குத்தான் இந்த அமைச்சர்கள் பெருக்கம் அடிகோலக்கூடும்.

இத்தனை அமைச்சர்களுக்கும் ஊதியம்-பயணச் செலவு-அலுவலக வசதிகளுக்காகக்கூடிய செலவு-வாகனங்களுக்காகும் செலவு —இப்படிப் பல செலவுகள் வேறு உள்ளன. இவ்வளவு பெருஞ் செலவையும் மைசூர் மக்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்பார்கள் என எதிர்பார்க்க முடியாது.

வீரேந்திர பாட்டீல் அமைத்திருக்கின்ற 'விரிவான அமைச்சரவை'யில், அவர், தம்மைத் தேர்தலில் எதிர்த்த ஜாட்டி அவர்கட்கு இடமளிக்கவில்லை. அதுபோன்றே, ஜாட்டி அவர்களுக்கு உறுதுணையாக இருந்து தம்மை எதிர்த்த ஆர்.எம். பாட்டீல், தேவராஜ் ஹர்ஸ், நாராயண கவுடா ஆகிய மூவரையும் அமைச்சர்களாகப் பாட்டீல் ஏற்றுக்கொள்ளவில்லை.

ஜாட்டி அவர்களைப் போன்றே இவர்கள் மூவரும், முறையே போலீசு–தொழிலாளர்–சமூக நலன் ஆகிய மூன்று துறைகளுக்கும் அமைச்சர்களாக–நிஜலிங்கப்பா அமைச்சரவையில் – இடம் பெற்றிருந்தவர்கள். முன்னைய அமைச்சரவையில் ஜாட்டி அவர்கள் அமைச்சராக இருந்ததுடன், ஏற்கனவே முதலமைச்சராகவும் இருந்திருக்கின்றார். ஏற்கனவே முதலமைச்சராக சிறிதுகாலம் பணிபுரிந்திருக்கின்ற காந்தி அவர்களும் இப்புதிய அமைச்சரவையில் இடம்பெற்றிருக்கவில்லை.

ஜாட்டிக்கும், அவரது ஆதரவாளர்களுக்கும் பாட்டீல் அவர்கள் அமைச்சர் பதவிகளைக் கொடுத்து, அப்பதவிகளை அவர்கள் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டனரா அல்லது அவர்கள் பாட்டீல் அவர்களால் அலட்சியப்படுத்தப்பட்டுவிட்டார்களா என்பது தெரியவில்லை.

நிகழ்ந்தது எதுவாக இருந்திட்டாலும், 'முதலமைச்சர் பாட்டீல் கோஷ்டி' என்றும், 'ஜாட்டி கோஷ்டி' என்றும் சட்டமன்றக் காங்கிரசுக் கட்சி பிளவுபட்டிருக்கிறது என்பதும், இரண்டு சாராருக்குமிடையில் கசப்புணர்ச்சி நீடித்து இருந்துவருகிறது என்பதும், புதிய அமைச்சரவையில் அவர்கள் இடம் பெற்றில்லாததிலிருந்து தெளிவாகத் தெரிகிறது.

குறிப்பிடத்தக்க கருத்து மாறுபாட்டின் காரணமாகக் காங்கிரசுக் கட்சிக்குள்ளாகப் பிளவு இருந்துவருகிறது என்பது உண்மை. கருத்து மாறுபாட்டின் காரணமாக உள்ள பிளவைவிட, பெரும் பிளவாக இருந்துவருவது காங்கிரசுக்குள்ளாக நீடித்து நிலையாக இருந்துவரக்கூடிய பதவிப் போட்டித்தான் என்பது வெளிப்படை.

ஒரே அமைச்சர் நீங்கலாக, முதலமைச்சர் பாட்டீல் உட்பட அமைச்சர்கள் அனைவரும் சராசரி நாற்பது வயதுக்குமேல் போகாதவர்களாவர். வயதில் மூத்த காங்கிரசு அமைச்சர்களிடம் காணப்பட்டதுபோன்ற பதவி மோகமும், பதவிச் சண்டையும், பாட்டீல் அமைச்சரவையில் இளைஞர்களாக உள்ள காங்கிரசுக் கட்சியினரிடை காணப்படுமா இல்லையா என்பதற்கான விடையைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

மைசூர் சட்டப் பேரவையில் காங்கிரசுக் கட்சியின் எண்ணிக்கை கணிசமானதாக இல்லை. காங்கிரசுக் கட்சியைவிட்டுச் சிலர் விலகி எதிர்க் கட்சியுடன் சேர்ந்துகொண்டால், காங்கிரசு அமைச்சரவை கவிழ்ந்துவிடக்கூடிய அபாயம் இருந்துவருகிறது. இப்படி ஒரு வீழ்ச்சி பாட்டீல் அமைச்சரவைக்கு ஏற்படக்கூடாது என்பதே நமது கருத்து.

முதலமைச்சர் பதவியைவிட்டு விலகி வருவதற்குமுன் முன்னால் முதலமைச்சர் நிஜலிங்கப்பா அவர்கள், தாம் பதவியைவிட்டு விலகிவிட்டால் மைசூரில் காங்கிரசுக் கட்சி சீர்குலைந்துவிடக்கூடிய அபாயம் இருப்பதாக அறிவித்திருக்கின்றார். அத்தகைய நிலைமைகள் காங்கிரசுக் கட்சிக்கு ஏற்படுவதும் ஏற்படாமல் தவிர்க்கப்படுவதும் முதலமைச்சராகப் பதவியேற்றிருக்கும் வீரேந்திர பாட்டீல் அவர்களின் அறிவாற்றலையும், செயல் திறனையும் பொறுத்திருக்கிறது.

'குறைவாகப் பேசவேண்டும்—நிரம்பச் செயலாற்ற வேண்டும்' எனச் சூளுரைத்துக்கொண்டு, முதலமைச்சர் பாட்டீல், ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ளார். இச்சூளுரை, 'செயலுருவம் பெற வேண்டும்' என்பதே நமது விருப்பம்.

—கா. க.

உலகிலேயே 'முதல் முயற்சி'

இயந்திரங்களாலேயே இயங்கும் தொழிற்சாலை

முழுக்க முழுக்கக் 'கம்பியூட்டர்'களினாலேயே இயக்கப்படும் தொழிற்சாலை ஒன்று பிரிட்டனில் கட்டப்படுகிறது. இயந்திரங்கள் உற்பத்தி செய்யும் இந்தத் தொழிற்சாலை விரைவில் இயங்க ஆரம்பிக்கும்.

உலகிலேயே இப்படி முழுக்க 'கம்ப்யூட்டர்'களால் இயக்கப்படும் முதல் தொழிற்சாலை இதுதான்!

சாதாரணத் தொழிற்சாலைகளின் அளவில் ஆறில் ஒரு பங்கு அளவுக்குத்தான் இந்தத் தொழிற்சாலை இருக்கும்; ஆனாலும், உற்பத்தித் திறனில் அதே அளவில் இதுவும் இருக்கும்.

சாதாரணமாக ஓர் இயந்திரம் தயாரிக்க ஆகும் நேரத்தில் 20 இயந்திரங்களை இந்தத் தொழிற்சாலை தயாரித்துவிடும்; உற்பத்திச் செலவில் 90 சதவிகிதம் குறைந்துவிடும்; இதுதான் இந்தத் தொழிற்சாலையின் சிறப்பு.

இந்தத் தொழிற்சாலையில் ஆட்களும் இருப்பார்கள் — பெயரளவுக்கு! ஆனால், இயந்திரங்களை இயக்குவதெல்லாம் 'கம்ப்யூட்டர்'கள்தான்!

குகையில் மறைந்திருந்த பாண்டியர் கால ஓவியங்கள்

மதுரை அருகே கண்டுபிடிப்பு

மதுரை, மே 31—

மதுரை—காரைக்குடிச் சாலையில் கீழ்வளைவு என்னுமிடத்திலுள்ள இயற்கைக் குகையில், பாண்டியர் கால ஓவியங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இக்குகையில் சமண முனிவர்களான ஆறு தீர்த்தங்கரர்களின் செதுக்குச் சிலைகள் உள்ளன.

குகை முழுவதும் ஓவியங்கள் நிரம்பியிருந்திருக்க வேண்டும்.

யட்சர்கள், பதுமங்கள் (தாமரை) ஓவியங்கள் இலேசாகத் தெரிகின்றன!

ஓவியங்கள் கி. பி. எட்டாம் நூற்றுண்டைச் சேர்ந்தவை. சமண முனிவர்கள் இக்குகையில் வசித்து வந்தனர். 8-வது நூற்றுண்டுக்குப்பின் இதைக் கைவிட்டனர்.

பாண்டியர் கால ஓவியங்கள் மிகச் சிலதான் உள்ளன. நெல்லை மாவட்டம் திருமலைபுரத்தில் சில உள்ளன!

ஆண்டுதோறும் உயர்ந்துவரும் இரயில்வே வருமானம்

புது[illegible] மே 31—

இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் இந்திய இரயில்வேக்கு ரூ 72·77 கோடி வருமானமாகக் கிடைத்தது; இது, சென்ற ஆண்டு ஏப்ரல் மாதம் கிடைத்த வருமானத்தைவிட ரூ. 3·58 கோடி அதிகமாகும்.

இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் இரயில்வேயின் சரக்குப் போக்குவரத்து சென்ற ஆண்டு ஏப்ரல் மாதம் இருந்ததைவிட 2 55 இலட்சம் டன்—அதாவது, 1·91 சதவிகிதம் அதிகமாக இருந்தது.

ஆனால், இரயில் பயணிகள் எண்ணிக்கை சென்ற ஆண்டு ஏப்ரல் மாதம் இருந்ததைவிட இந்த ஆண்டு ஏப்ரலில் 1 31 சதவிகிதம் குறைவாக இருந்தது.

'மக்கள் சக்தியைத் தம் பக்கம் ஈர்த்துக்கொள்ளும் ஆற்றலைப் பெற்றிருக்கின்றார்'

முதலமைச்சர் அண்ணா பற்றிக் கேரள வலது கம்யூனிஸ்டு அமைச்சர்

கொச்சி, மே 27—

"தமிழகத்தில் ஏதேனும் ஓர் அரசியல் மாறுதலைச் செய்வதற்குமுன் அதற்கு ஆதரவான மக்கள் சக்தியைத் தம் பின்னே திரட்டிக் கொள்ளும் ஆற்றலை, திரு. அண்ணாதுரை பெற்றிருக்கிறார்"

என்று வலது கம்யூனிஸ்டுத் தலைவரும் கேரள அமைச்சருமான திரு. எம். என். கோவிந்தன் நாயர், இங்கு பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது :—

"கேரளத்தை ஆட்சி செய்யும் கூட்டணிக் கட்சிகளும், அவற்றின் தலைவர்களும், வெளிப்படையாக வாக்குவாதம் செய்வது அவ்வளவு நல்லதல்ல.

"மத்திய அரசுக்கு எதிராக மாநில அரசு கிளர்ச்சியில் ஈடுபடும்போது, தன் சகக் கட்சிகளிடமும், மக்களிடமும் முன்னர்இருந்ததைவிட அதிகமான ஒற்றுமையை ஏற்படுத்த வேண்டும்; இல்லையேல், கிளர்ச்சி தோல்வியடையும்."

தமிழக முதலமைச்சர் அண்ணாதுரையின் அரசியல் மேதைத் தன்மையை, இந்தச் சந்தர்ப்பத்தில் அமைச்சர் கோவிந்தன் நாயர், தனியாகக் குறிப்பிட்டுக் காட்டிப் பாராட்டினார்."

—'கேரள கௌமதி' 25—5—68

வள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டு விழா

சென்னை, மே 31—

'வள்ளுவரின் 2 000 ஆண்டின் பிறந்த நாள் விழாவை, தமிழகமெங்கும் சிறப்பாகக் கொண்டாட இருக்கிறோம்.

"வள்ளுவரின் இந்த 2,000 ஆண்டு நிறைவு விழா எந்த இடத்திலும் — பட்டியிலும் தொட்டியிலும் — எப்பக்கம் திரும்பினாலும் 'திருவள்ளுவர் விழா' என்ற முறையில் சிறப்பாக நடைபெறும் என்று நாங்கள் நம்புகிறோம்.

"திருவள்ளுவர் நமக்குச் சொந்தம்; ஆனால், அவரது குறள் உலகத்திற்கே சொந்தம்.

"வள்ளுவரின் சிறப்பை எடுத்துக் கூறினால் ஒவ்வொரு குறளுக்கும் ஒவ்வொரு நாள் ஆகும்.

"வள்ளுவர் குறளை, எக்காலத்திற்கும் பொருந்துமாறு அமைத்து உள்ளார்கள்."

—அமைச்சர் கருணாநிதி

(தேனாம்பேட்டை குடும்ப நலத் திட்ட இயக்குநர் அலுவலக வள்ளுவர் விழாவில்)

புதிதாகப் பதிவான நிறுவனங்கள்

தமிழகத்தில் அதிகம்

புதுடில்லி, மே 31—

சென்ற ஆண்டு ஜூன் திங்களுடன் முடிந்த காலாண்டில் இரண்டு அரசு நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டன; இவற்றில் இவற்றில் ஒன்று ஆந்திரத்திலும், மற்றொன்று மைசூரிலும் பதிவாயின. 35 அரசு நிறுவனங்கள், அவற்றின் செலுத்தப்பட்ட மூலதனத்தை அதிகரித்தன.

பரிசீலனை காலத்தில் அரசாங்கத் துறையில் அல்லாத 228 நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டன அவற்றின் மொத்த அனுமதிக்கப்பட்ட மூலதனம் ரூ 37.94 கோடியாகும்.

டில்லி, மேற்கு வங்காளம், மாராட்டிரம், தமிழ்நாடு ஆகிய இடங்களில் அதிகமான எண்ணிக்கையில் நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டன.

ப[illegible] கம்[illegible] அதி[illegible] மூல[illegible] எண்[illegible] தது [illegible]

பரிசீலனை [illegible] வனங்கள் [illegible] தின. இவற்[illegible] கலைக்கப்பட்டன; [illegible] கள் பெயர்கள் பதிவு[illegible] லிருந்து நீக்கப்பட்டுவிட்[illegible]

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் குறளாராய்ச்சி

அண்ணா தலைமையில் ஜாகீர் உசேன் துவக்கிவைப்பார்

அண்ணாமலை நகர், மே 31—

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில், திருக்குறள் ஆராய்ச்சித் துறை ஒன்றை, குடியரசுத் தலைவர் டாக்டர் ஜாகீர் உசேன் ஜூலை 9-ம் நாள் துவக்கிவைப்பார்.

முதலமைச்சர் அண்ணா அவர்கள், விழாவுக்குத் தலைமை தாங்குவார்.

சென்னையில் நடைபெற்ற இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டின்போது, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் திருக்குறள் ஆராய்ச்சிக்கென ரூ 3-இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டது நினைவிருக்கலாம்.

டாக்டர் வேலையை இயந்திரம் செய்யும்

நோயாளியின் உடல் அறிய 'கம்ப்யூட்டர்'

சிகிச்சை நடைபெறும்போது நோயாளிகளின் உடல்நிலையை அறிந்துகொள்ள இனி கருவிகள் ('கம்ப்யூட்டர்') பயன்படுத்தப்படலாம்.

அறுவைச் சிகிச்சையின்போது நோயாளியின் இதயத் துடிப்பு—இரத்த அழுத்தம்—இரத்த ஓட்டம்—நாடித் துடிப்பு—சுவாசம் மற்றும் பலவகையான நிகழ்ச்சிகளை தானே பதிவு செய்துகொள்ளும் ஒரு புதுவகை 'கம்ப்யூட்'டரை பிரிட்டிஷ் நிறுவனம் ஒன்று கண்டுபிடித்துள்ளது.

இந்த [illegible] நோயாளியின் [illegible]

[illegible] இந்த 'கம்ப்யூட்டர்'கள், [illegible] குடன் பதிவு செய்து தொ[illegible] விடும். இதனால் நிலைமைக்கு [illegible] நடவடிக்கைகள் மேற்கொள்வ[illegible] தாமதம் தவிர்க்கப்படும்.

விஞ்ஞான உலகம் தரும் புதிய தகவல்

காந்த சக்தியின் திசை மாறலாம்!

அறுபது தலைமுறைக்குப்பின் உலகமே அழியும் பேராபத்து உருவாகியிருக்கிறது

"இன்னும் 2,000 ஆண்டுகளுக்குள் உலகமே அழிந்து போகும் பேராபத்து ஒன்று ஏற்படவிருக்கிறது"

என்ற தகவல், மேற்கு ஜெர்மனியின் விஞ்ஞான ஆராய்ச்சிக் கழகம் வெளியிட்டுள்ள ஓர் ஆராய்ச்சிக் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"இந்த ஆபத்து கி. பி. 4000 ஆண்டுவாக்கில் ஏற்படலாம்; பல தலைமுறைகளுக்குப் பிறகுதான் வரப்போகிறது என்றாலும், இவ்வுலகில் வாழும் மனிதர்கள் இதைப்பற்றிக் கவலைப்படாமல் இருக்கமுடியாது. சுமார் 60 தலைமுறைகளுக்குப்பின் இந்தப் பேராபத்து ஏற்படலாம்" என்று அக்கட்டுரை கூறுகிறது.

உலகில் உள்ள காந்த சக்தி சில சமயம், 'திசை மாறியும் ஏற்படலாம்' என்பதை விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

இப்போது காந்த முள் எப்போதும் வடக்கு நோக்கியே காட்டுவதைக் காணலாம்; இது நாளடைவில், தெற்கு நோக்கி காட்ட ஆரம்பித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லையாம்!

ஆனால், அது எளிதில் ஏற்பட்டுவிடாது—பல ஆயிரம் ஆண்டுகள் ஆகலாம்!

விஞ்ஞானிகள், 'சுமார் 2000 ஆண்டுகள் பிடிக்கலாம்' என்று ஒரு குத்துமதிப்பாகக் கணக்கிட்டுள்ளனர்.

'பாலிமோ ஜெனடிக்ஸ்' என்கிற புது விஞ்ஞானத் துறை, இது பற்றி விரிவாக ஆராய்கிறது.

இதன்படி, எரிமலை நெருப்பைக் கக்கும்போது அதிலிருந்து வெளிவரும் பொருள்களுடன் உலோகத் துண்டுகளும் பூமியின் அடிப்பாகத்திலிருந்து சிதறி வெளிப்படுகின்றன; இதனால், காந்த சக்தி இழுவை சிறிது சிறிதாக பாதிக்கக்கூடும்.

சரித்திரத்தின் பல காலங்களில் பூமியில் காந்த சக்தி எந்தெந்த விதமாக இருந்துவந்திருக்கிறது என்பதை பாசால்ட் கற்கள் ஆராய்ச்சிகளைக் கொண்டு ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். ஆகவே, காந்த சக்தியின் திசை அவ்வப்போது ஓரளவுக்கு மாறி வந்துள்ளது என்பது தெரியவந்திருக்கிறது.

ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒரு சிறிதுதான் காந்த சக்தி திசை மாற்றம் ஏற்படும் என்பதும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

விண்வெளியிலிருந்து தரை நோக்கி வரும் விண்கற்களிலிருந்து பூமியைக் காப்பது இந்தக் காந்த சக்திதான்!

உலகைச் சுற்றி 'வான் ஆலன் பெல்ட்' என்கிற மண்டலம், பல மைல்களுக்குப் பரவியுள்ளது; இதன் காரணமாக, கதிரியக்கத் தாக்குதல்கள் பூமியைப் பாதிக்காமல் இருக்கின்றன.

ஹனோவர் தொழில் நுணுக்கப் பல்கலைக்கழகம், 2,000 ஆண்டுகளுக்குப்பின் வரும் ஆபத்து எத்தகையது—எவ்வளவு கடுமையாக இருக்கும்' என்றெல்லாம் ஆராய்ந்துவருகிறது.

அவர்கள் கண்டுபிடிப்புகளிலிருந்து, 'உலகம் அந்த ஆபத்திலிருந்து தப்பிவிடமுடியும்' என்ற நம்பிக்கைக்கு இடமேற்பட்டிருக்கிறது

இந்த நிபுணர்களின் ஆராய்ச்சிகளின்படி, 'வான் ஆலன் பெல்ட்' மண்டலத்தில் இருக்கும் காற்று மண்டலம், 'கதிரியக்கத் தாக்குதல்களைத் தடுத்து நிறுத்தக்கூடியது' எனத் தெரியவந்திருக்கிறது.

காந்த சக்தி பற்றியவரையில், எந்தவிதமான மாறுதல் ஏற்பட்டாலும் இந்தக் காற்று மண்டலம் இப்போதுள்ளது போலவே எப்போதும் இருக்கும்.

மற்றொரு கவலை நீக்கும் தகவல், எலெக்டிரோ-கெமிகல் (மின் சக்தி இரசாயனம்) துறையில் எவ்வளவோ முன்னேற்றமும் கண்டுபிடிப்புகளும் ஏற்பட்டுவருகின்றன இன்னும் 2,000 ஆண்டுகளுக்குள் இத்துறையில் இன்னும் எவ்வளவோ முன்னேற்றமும், புதுக் கண்டுபிடிப்புகளும் ஏற்படலாம்.

ஆகவே, உலகத்திற்கு அப்போது ஏற்படும் ஆபத்து இப்போது அஞ்சும்படியான அளவுக்கு இராது என்று நிச்சயமாகச் சொல்லலாம்.

உடுமலை நாராயணன் உடல்நிலை

கோ[illegible]வட்ட தி. மு. க. செ[illegible] நாராயணன்[illegible]

[illegible] மருத்துவ நிபுணர்கள் கூறியிருக்கின்றனர்; எனவே, அவரைப் பார்ப்பதற்கென்று யாரும் வரவேண்டாம் என்று கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

பெங்களூர் 56-வது வட்ட எம். ஜி. ஆர். மன்றம்

பெங்களூர்—[illegible]நபுரம் எம். ஜி ஆர். மன்ற நிர்வாகிகள் தேர்தல் 19—5—68-ல், வட்டக் கிளை கழகச் செயலாளர் மு. கூத்தரசனை ஆணையாளராகக் கொண்டு நடைபெற்றது; தேர்ந்தெடுக்கப்பட்டோர் விவரம் :—

தலைவர் : மு. சத்தியமூர்த்தி; செயலாளர் : மு. புண்ணியமூர்த்தி; துணைச்செயலாளர் : நா. சுகுணன்; பொருளாளர் : சி. பெர்னட்; மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் 13 பேர்.

கடலூர் நகரச் செயலாளருக்கு பாராட்டு

கடலூர் நகர தி. மு. க செயலாளர் கி. கோவிந்தராசனுக்கு 16-வது வட்ட தி. மு. க சார்பில் திருப்பாதிரிப்புலியூர் ரெட்டி சத்திரத்தில் சி எஸ் மணி தலைமையில் பாராட்டு—தேநீர் விருந்து நடைபெற்றது கடலூர் நகர கிளைக் கழகச் செயலாளர்களும் பிரதிநிதிகள் அனைவரும் வருகை தந்தனர்.

செயலாளர் கி. கோவிந்தராசனின் பணிகளைப் பாராட்டித் தோழர்கள் என். தேவராசு, வி நடேசன் எம் சி., தி கண்ணப்பன், வி. கிருஷ்ணமூர்த்தி, எஸ் என். கண்ணன், சு. இலட்சுமணன், எஸ். இராமச்சந்திரன், பால்ராசு ஆகியோர் பேசினர்.

தோழர் கி. கோவிந்தராசன், பாராட்டுக்கு நன்றி தெரிவித்தும், தன்னுடன் இதுவரையில் ஒத்துழைத்து உதவிய கழகத் தோழர்கள் அனைவருக்கும் நன்றியும் தெரிவித்துக் கொண்டார்.

திருத்தங்கல்லில் சீரணித் தொண்டர்கள் பணி

திருத்தங்கல்லில் உள்ள இளையோர் ஆதரவுப் பள்ளிகளுக்கு 26—5—68-ல், தோழர் ஏ. எஸ் கனி தலைமையில், தோழர்கள் இரா. பொன்பாண்டியன், அய்யனார், லூர்துசாமி, இளஞ்செழியன் மணி, ஏ. பி பாண்டியன், இராசதுரை, சேர்மக்கனி ஆகிய சீரணியினர், வெள்ளையடித்துத் துப்புரவு செய்தனர்.

பொதுமக்கள், சீரணியின் தொண்டினைப் பாராட்டினர்.

விழுப்புரம் 15-வது வட்ட அழகிரி மன்றம்

விழுப்புரம் 15-வது வட்டத்தில் பட்டுக்கோட்டை அழகிரிசாமி மன்றம் அமைக்கப்பட்டு நிர்வாகிகள் தேர்தல் 25—5—68 அன்று நடைபெற்றது; தேர்ந்தெடுக்கப்பட்டோர் :—தலைவர் : எல் டி செல்லையா; செயலாளர் : இராமனுசாமி; துணைச்செயலாளர் : ம. சேக் அகமது; பொருளாளர் : வெ. சீனுவாசன்; பொறுப்பாளர் : வெ. சுந்தரமூர்த்தி; மற்றும் 7-பேர் செயற்குழு உறுப்பினர்கள்.

தி.மு.க. கிளைகளின் மறுதேர்தல்கள்

தலைமைக் கழக அறிவிப்பு

ஏற்கனவே மே 4, 5-ம் நாட்களில் நடைபெற்ற கழகக் கிளைகளின் தேர்தல்களில் குறிப்பிட்ட குறைபாடுகளைக் குறிப்பிட்டு அந்தந்த கிளைகளைச் சார்ந்த தோழர்களிடமிருந்து தலைமைக் கழகத்திற்குக் கிடைத்த முறையீடு—குறைபாடுகளைப் பரிசீலனை செய்ததில், கீழ்க்காணும் கிளைகளில், குறிப்பிட்டுள்ள நாட்களில், குறிப்பிட்டுள்ள தலைமைக் கழகச் சார்பான ஆணையாளர்களின் தலைமையில், மறுதேர்தல் நடைபெறவேண்டுமெனத் தலைமைக் கழகம் முடிவுசெய்து அந்தந்தக் கிளைகளின் நிர்வாகிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

2 6—68 மாலை 6 மணி

திருவொற்றியூர் நகர

4, 23-வது வார்டுகள்

[illegible] தலைவர், [illegible] பொறுப்பு [illegible]டைபெறும்]

[illegible]றிஞர் [illegible]னன்

[illegible]மாலை 6 மணி

[illegible]டக்குடி

([illegible]த. ஆ. மாவட்டம்)

[illegible]யாளர் : பொதுக்குழு உறுப்பினர்

கோ. செங்குட்டுவன்

4—6—68 மாலை 6 மணி

சோளிங்கபுரம்

(வ. ஆ. மாவட்டம்)

ஆணையாளர் : சென்னை மாவட்ட தி. மு. க. அவைத் தலைவர்

காஞ்சி மணிமொழியார்

4—6—68 மாலை 6 மணி

பம்மல்

(செங்கற்பட்டு மாவட்டம்)

ஆணையாளர் : செங்கற்பட்டு மாவட்டச் செயலாளர்

சி. வி. எம். அண்ணாமலை

'அறிவகம்', சென்னை-13
30—5—68

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

புதிய காங்கிரசு முதல்வரின் ஆசை!

பெங்களூர், மே 30—

"சொல் குறைவாகவும், செயல் சிறப்பவும் இருக்க வேண்டும் என்பதே என்னுடைய குறிக்கோள்!

'மக்களுக்குத் தொண்டாற்றும் வகையில், நிர்வாகச் சாதனத்தை உருப்படியாகப் பயன்படுத்தப்போகிறேன்!

' மாநிலத்தின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு மக்களின் ஒத்துழைப்பைக் கோருவேன்"

என்று, மைசூர் முதலமைச்சராகப் பதவியேற்ற வீரேந்திர பாட்டில் கூறியிருக்கிறார்.

செயற்கைக் கோள் மூலம் தந்தித் தொடர்பு

பிறநாடுகளுக்கும் உதவ பிரிட்டன் ஆவல்

"தந்தித் தொடர்புக்கு செயற்கைக் கோளைப் பயன்படுத்தும் முறை பரவலாக்கப்பட வேண்டும். இந்த வகையில் பிரிட்டன் தனது அனுபவ அறிவைப் பிற நாடுகளுடன் பகிர்ந்து கொள்ளத் தயார்"

என்று பிரிட்டிஷ் அஞ்சல் துறை அமைச்சர் திரு ராய் மேசன் கூறினர்.

இலண்டனில் தொடங்கிய சர்வதேச தந்திப் போக்குவரத்துப் பற்றிய கருத்தரங்கைத் துவக்கி வைத்துப் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினர்.

50 நாடுகளிலிருந்து 250 நிபுணர்கள் கலந்துகொள்ளும் இந்தக் கருத்தரங்கில், திரு. தேவநாதன், திரு. கோசரன் ஆகிய இருவரும் இந்தியப் பிரதிநிதிகளாகக் கலந்து கொண்டனர்.

திரு ராய் மேசன் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"செயற்கைக் கோள் மூலம் தந்தித் தொடர்பை மேம்பாடு செய்ய நல்ல வாய்ப்பு இருக்கிறது; ஆனால் இந்த முறையில் தற்போது ஒருசில நாடுகள் மட்டுமே தேர்ச்சியடைந்துள்ளன. அவர்கள் பெற்றுள்ள அறிவும், அனுபவமும் பரவலாக்கப்பட வேண்டும். அந்த வகையில் இந்தக் கருத்தரங்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்று நம்புகிறேன்

"எல்லா நாடுகளிலும் இந்த முறை பின்பற்றப்பட்டு, தந்தித் தொடர்பு சீரடைய வேண்டும். இதுபற்றிய பிரிட்டனின் விஞ்ஞான வளர்ச்சி எங்களுக்கு மட்டுமே பயன்படவேண்டும் என்ற எண்ணம் பிரிட்டனுக்கு இல்லை. இதனைப் பிற நாடுகளுடன் பகிர்ந்து கொள்ள நாங்கள் தயார்"

இந்தக் கருத்தரங்கு இரண்டு வாரகாலம் நடைபெறும். கருத்தரங்கில் கலந்துகொள்ள வந்திருக்கும் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் மேற்கு இங்கிலாந்தில் உள்ள செயற்கைக்கோள் தந்தித் தொடர்பு நிலையத்தைப் பார்வையிடுவார்கள்.

உணர்வோர் உள்ளம் :

அண்ணா ஆட்சிக்குப் பாராட்டு

ஐயா,

29—5—68 அன்று தமிழக அரசு வெளியிட்டுள்ள புதிய பஞ்சப் படி உத்தரவு சிறப்புடைய ஒன்றாகும்

இந்திய அரசு ஊழியர்களின் பஞ்சப் படிக்குச் சமமாக நமது மாநில அரசும் பஞ்சப் படி கொடுப்பது அறிஞர் அண்ணாவின் திறமைக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

தமிழக அரசின் ஊழியர்கள், அரசுக்கு உண்மையான விசுவாசமுள்ள பணியாளர்களாகப் பணியாற்றி மக்களின் நன்மதிப்பைப் பெற முயலவேண்டும்.

ஏ. நடராசன்
தாரமங்கலம்

திருவில்லிபுத்தூரில் தமிழகப் புலவர் குழு

நகராட்சி மன்ற வரவேற்பு—பொதுக்கூட்டத்தில் புலவர்கள் பங்கேற்பு

தமிழகப் புலவர் குழுவின் 24-வது கூட்டம், திருவில்லிப்புத்தூர் பென்னிங்டன் நூல் நிலைய மாளிகையில், மே 25, 26 ஆகிய நாட்களில் கூடியது.

பிற்பகல் 2 மணிக்குச் செயற்குழு கூடி, முடிவுகள் பற்றி ஆராய்ந்தது.

செயற்குழுத் தலைவர் திரு. மே. வீ. வேணுகோபால் தலைமையேற்கக் கூட்டத் தலைவராக திரு. ஆ. நமசிவாயனார் தேர்ந்தெடுக்கப்பெற்றுப் பொன்னாடையும், வெள்ளிப் பதக்கமும் சூட்டப்பெற்றுத் தலைவராக அமர்த்தப்பெற்றார்.

பென்னிங்டன் நூல் நிலைய நிலைபெறு செயலாளர் ஆர். வி. இராமசுந்தரம் குழுவைத் தொடங்கி வைத்தார்.

மாலையில் நகரவையார், புலவர் குழுவினர்க்கு வரவேற்பு அளித்தனர்; நகரவைத் தலைவர் என். பி. சிவகாமிநாதன் தலைமை தாங்கினார். நூலகச் செயலாளர் ஆர். வி. இராமசுந்தரமும், தலைவரவர்களும் தனித்தனி வரவேற்புரை படித்து வழங்கினர்.

திரு. இராமசுந்தரமும் நூலகக் குழுவினரும் புரவலர்களாயினர்; புலவர் குழுவின் அமைப்பாளரும் பொருளாளருமான திரு. கி. ஆ. பெ. விசுவநாதம், இவ்விருவர்களையும் புரவலர்களாக்கிப் பாராட்டினார்.

வரவேற்புரைக்குப் புலவர் குழுவினர், நகரவைத் தலைவர்க்கும், நூல் நிலையச் செயலாளர்க்கும் அன்பும் நன்றியும் கசியும் வாழ்த்துப் பாக்கள் பாடி அளித்தனர்.

திருவாளர்கள் சி. இலக்குவனார், கோவிற்பட்டிக் கோவிந்தசாமி, கல்லூரி முதல்வர் அரசு. நாராயணசாமி, மதுரைப் பல்கலைக் கழகப் பேராசிரியர் மெ. சுந்தரம், திருமதி தே. தியாகராசன், தஞ்சை அரண்மனை நூலக நூற்பதிப்பு ஆசிரியர் கோவை இராம. கோவிந்தசாமி, பேரூர் சாந்தலிங்க அடிகளார், கல்லூரி முதல்வர் இராமசாமி அடிகளார் ஆகியோர் தமிழக இனமொழி — நாகரிக வளர்ச்சி பெருமைகளமைந்த விரிவுரை வடிவில் வரவேற்புக்குப் புலவர் குழுச் சார்பில் நன்றி தெரிவித்தனர்.

மறுநாள் காலை 9-35 மணிக்குக் கருத்தரங்கு நிகழ்ச்சி தொடங்கியது; 'வளரும் தமிழில் வளர்ந்து நிற்கும் வழுக்களைக் களைதல்' என்பது கருத்தரங்குக்குப் பொருளாகக் கொடுக்கப்பெற்றது.

செயற்குழுத் தலைவர் மே. வீ. வேணுகோபாலர், கருத்தரங்கினைத் தொடங்கிவைத்துத் தம் கருத்தினை இன்னதெனக் கூறினர். புலவர்களில் பலர் கருத்தரங்கில் பங்குகொண்டனர்.

மாலை 6 மணிக்கு நகர மக்களின் வேண்டுகோளின் மேல் பேரவை கூடியது. பண்டித இராம. கோவிந்தசாமி, வித்துவான் ஔவை சு. துரைசாமி, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துத் தமிழ் விரிவுரையாளர் புலவர் அ. நடேசன், மதுரைத் திருவள்ளுவர் கழகச் செயலாளர் பண்டித. மீ. கந்தசாமி, பேராசிரியர் ஆபிரகாம் அருளப்பன் ஆகியோர் பழந்தமிழர்களின் பல்வேறு கொள்கைகள் பற்றி விரித்துரைத்தனர்.

முதல் நாள் பிற்பகல் கூடிய செயற்குழுவில், 21 தீர்மானங்கள் முழுமனத்துடன் நிறைவேறின.

நெல்லிக்குப்பம் கருணாநிதி மன்றம்

25—5—68 அன்று நெல்லிக்குப்பம் கலைஞர் கருணாநிதி மன்ற அமைப்புக் கூட்டமும், நிர்வாகிகள் தேர்வும் நடைபெற்றது; தேர்ந்தெடுக்கப்பட்டோர் விவரம் :—தலைவர் : செந்தாமரைக்கண்ணன்; செயலாளர் : தி. இராசசேகரன்; துணைச்செயலாளர் : கோ. வைத்தியநாதன்; பொருளாளர் : கோ. பழனிசாமி; மற்றும் 9-பேர் செயற்குழு உறுப்பினர்கள்.

மொரீஷியஸ் செல்லும் அமைச்சர் சத்தியவாணிமுத்து

சென்னையிலிருந்து ஜூன் 3-ஆம் நாள் புறப்பட்டு பம்பாய் வழியாகப் பயணமாகிறார்

சென்னை, ஜுன் 1—

அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள் மொரீஷியஸ் அரசின் அழைப்பின்பேரில் ஜுன் 3-ம் நாள் விமானம்மூலம் பம்பாய் வழியாகப் பயணமாகிறார், அந்நாட்டில் அவர் ஒரு வார காலம் தங்கியிருப்பார்.

மொரீஷியசின் பிரெஞ்சுச் செய்தித் தாள்கள் அவரது வருகை பற்றி முதல் பக்கத்தில் புகைப்படத்துடன் செய்தி வெளியிட்டிருக்கின்றன.

அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள் ஜுன் 3-ம் நாள் பிற்பகல் 2-30 மணிக்கு சென்னையிலிருந்து விமானம்மூலம் புறப்பட்டு மாலை 4-20 மணிக்குப் பம்பாய் சென்றடைகிறார்; அங்கு அவர் மாராட்டிர மாநில கவர்னர் டாக்டர் செரியனின் விருந்தினராகத் தங்கியிருந்துவிட்டு ஜுன் 4-ம் நாளன்று பம்பாயிலிருந்து பிற்பகல் 1-45 மணிக்கு விமானம் மூலம் மொரீஷியஸ் பயணமாகிறார்; இரவு 7-55 மணிக்கு மொரீஷியஸ் தீவு சென்றடைவார்.

அங்கு ஜுன் 11-ம் நாள்வரை தங்கி தமிழ்க் கலாசார—மொழி மேம்பாட்டை அங்குள்ள மக்களுக்கு உணர்த்தும் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கு கொள்கிறார்.

பின்னர் ஜுன 11-ம் நாளன்று பிற்பகல் 4-05 மணிக்கு மொரீஷியஸ் தீவைவிட்டுப் புறப்பட்டு இரவு 11-30 மணிக்கு தார்-எஸ்-சலாம் சென்றடைவார்.

மறுநாள் (ஜுன் 12) இரவு 8-50 மணிக்கு தார்-எஸ்-சலாம் நகரிலிருந்து புறப்பட்டு இரவு 10-மணிக்கு நைரோபி சென்றடைகிறார்.

ஜுன் 12-ம் நாள் நைரோபியிலிருந்து புறப்பட்டு மறுநாள் பம்பாய் வந்தடைகிறார்.

அங்கிருந்து காலை 11-30 மணிக்குப் புறப்பட்டு 1-10 மணிக்கு சென்னை விமான நிலையம் வந்து சேருவார்.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

2--6--68

புதுவை

கீழூர் தி. மு. க. கிளை துவக்க விழா; மாலை 7-மணிக்கு தண்ணீர் சேமிப்பு நிலையத் திடல் அருகில்; பேசுவோர்: என். வி. நடராசன் எம்.எல்.சி., எம். ஏ. சண்முகம், திருநாவுக்கரசு, எஸ். ஆறுமுகம், மா. வேணுகோபால், தனஞ்செயன், கு. செல்லமுத்து.

3--6--68

பண்டசோழநல்லூர்

தி. மு. க. துவக்க விழா; தலைவர்: பாலகிருஷ்ணன்; பேசுவோர்: என். வி. நடராசன், எம். ஏ. சண்முகம், ஆறுமுகம், காங்கேயன், நமசிவாயம், தனஞ்செயன்.

கொண்டத்தூர்--பி.

திருவள்ளுவர் மன்றச் சார்பில் மாலை 6-30 மணிக்கு; தலைவர்: ஏ. ஏசுபாதம்; பேசுவோர்: ச. பொன்னரசன், ஆர். சம்பங்கி, பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ., பி. செயராமன் எம்.எல்.ஏ., முனிரத்தினம் பி.ஏ.பி.எல்., பி. கே. முனுசாமி, ஏ. வி. துரைசாமி, எம். கே. மெய்ஞானம், துரை அரசு, மற்றும் பலர்.

விசயபுரம்

கலைஞர் படிப்பக 9-வது ஆண்டு விழா; மாலை 6-மணிக்கு எல்லையம்மன் சன்னதி தெருவில்; தலைவர்: கோ. பரமசிவம்; பேசுவோர்: புலவர் அறிவுடைநம்பி, என். கிட்டப்பா எம்.எல்.ஏ., எல். ரெங்கநாதன், எம். சேக்தாவூது, ரெசாக்சா காதிரி, ஏ. எஸ். சிவசங்கரன், கே. ஏ. தியாகன், மற்றும் பலர்.

லால்குடி

எம். ஜி. ஆர். மன்றச் சார்பில் மாலை 6-30 மணிக்கு கீழவீதி பெரியார் திடலில்; தலைவர்: எல். டி. செயராமன்; பேசுவோர்: எம். ஆர். ஆர். வாசு, அன்பில் தர்மலிங்கம், ஆ. துரைராசு எம்.பி., மு. க. து. நடராசன் எம்.எல்.ஏ., அன்பில் கோபா[illegible] பி.காம்., ப. சம்பந்தம் பி.ஏ., மு. இலக்கையன், எஸ். வி. மலீக், மற்றும் பலர்.

★

பம்பாய் கழகத் தோழர்கட்கு:

"மோரீஸ் தீவுக்குப் பயணமாகும் அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள், 3-6-68 மாலை 4-20 மணிக்கு பம்பாய் சாந்தா குரூஸ் வந்து சேருகிறார்.

"விமான நிலையத்தில் சிறப்பான வரவேற்பு அளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன.

"4—6—68 பிற்பகல் 1 மணியளவில் மோரீஸ் தீவுக்குப் புறப்படும் அமைச்சருக்கு விமான நிலையத்திலேயே வழியனுப்பு நிகழ்ச்சியும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

"பம்பாய்வாழ் தமிழர்கள் அனைவரும், வரவேற்பு – வழியனுப்பு நிகழ்ச்சிகளில் பெருவாரியாகக் கலந்துகொண்டு நிகழ்ச்சிகளைச் சிறப்பிக்க வேண்டுகிறேன்"

என்று, பம்பாய் தி.மு.க. தலைமைக் குழுச் செயலாளர் தொ. து. அன்புச்செழியன் கேட்டுக்கொள்கிறார்.

கோவை மாவட்டம் திருப்பூர், ஈரோடு பெருநகரக் கிளைகள்

தலைமைக் கழக அறிவிப்பு

கோவை மாவட்டம் திருப்பூர், ஈரோடு ஆகிய இரு பெருநகரங்களும் ஓர் இலட்சத்திற்கும் அதிகமான மக்கட் தொகை கொண்டவையாக முடிவாகியிருப்பதால், இவை இரண்டும் கழகச் சட்டதிட்டம் விதி 9 – பிரிவு 10-ன்படி வட்டக் கழகத்திற்குரிய தகுதியைப் பெறும் பெரு நகரக் கிளை அமையும் உரிமை பெற்றவையாக இதன்மூலம் அறிவிக்கப்படுகின்றன.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

குழுக் கூட்டம்

"திண்டுக்கல் வட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம், 3—6—68 காலை 10 மணிக்கு திண்டுக்கல் சுபேதார் தெருவிலுள்ள கழக அலுவலகத்தில் நடைபெறும்" என்று, வட்டச் செயலாளர் மு. காதர்சா அறிவிக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்கள் ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

திருக்காட்டுப்பள்ளியில் பேருந்து நிலையம்

அமைச்சர் மு. கருணாநிதி திறந்து வைப்பார்

திருக்காட்டுப்பள்ளிப் பேரூராட்சியின் தியாகிய பர் பேருந்து நிலையத் திறப்புவிழா 2—6—68 காலை 9 மணிக்கு நடைபெறும்; தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. இரங்கபாஷ்யம் தலைமை வகிப்பார்; பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்கள் திறந்து வைப்பார்; புலவர் க. முருகையன் எம்.எல்.ஏ. மின் விளக்குகளை ஏற்றிவைப்பார்; பூதலூர் ஊராட்சி ஒன்றியத் தலைவர் திரு. ஆர். சாமிநாத மேற்கொண்டார். குடிநீர்க் குழாயைத் திறந்து வைப்பார்; திருவாளர்கள் மன்னை நாராயணசாமி, அன்பில் தர்மலிங்கம், துரை. வையர்புரி, க. பிச்சையா மங்கலார், டி. இராமையா சோழகர், ச. குழந்தைவேலன் ஆகியோர் சிறப்புரையாற்றுவர்; பேரூராட்சித் தலைவர் திரு. டி. எம். தங்கவேலு நாட்டார் வரவேற்புரையாற்றுவார்.

புலவர் அறிவுடைநம்பி

நிகழ்ச்சிகள்

ஜுன் 3: திருவாரூர்; 5: திருவெண்ணைநல்லூர்; 6: நாகை; 7: ஆலக்கிராமம்; 9: தெள்ளாறு; 10: குடியேற்றம்; 12: லாலாப்பேட்டை; 13: மாப்படுகை—மாயூரம்; 14: சீர்காழி—சேந்தங்குடி; 15: தேவரப்பன் பட்டி; 16: மதுரை—செல்லூர்; 23: தூத்துக்குடி.

'திணிப்பு இல்லை' என்று சொல்லிக் கொண்டே திணிக்கப்படுகிறது இந்தி!

திருச்சி மத்தியப் பள்ளியில் இந்தியில் பாடம் துவக்கம்

சென்னை, மே. 31—

'மத்திய அரசுப் பள்ளிகளில் இந்தித் திணிப்பு இல்லை' என்று வடநாட்டு அமைச்சர்கள் கூறினாலும், தென்னகத்தில் மத்திய அரசுப் பள்ளிகளில் இந்தித் திணிப்பு துவங்கிவிட்டது.

அந்தத் திணிப்பின் முதற்கட்டமாகத் திருச்சியிலுள்ள மத்திய அரசுப் பள்ளிகளில் மூன்று வகுப்புகளில் இந்தியில் பாடம் சொல்லித்தர ஆயத்தமாகிவிட்டனர்.

திருச்சியில் இயங்கும் மத்தியப் பள்ளியில் இந்தித் திணிப்பு நடந்துவிட்டது; அதாவது,

அப்பள்ளியில், மூன்று—நான்கு—ஐந்து—மற்றும் ஆறும் வகுப்புகளில் சமூக இயல் பாடம் இந்தியிலேயே நடத்தப்படுகிறது.

இந்தியில் சொல்லித் தரப்பட்ட போதிலும், மாணவர்கள் ஆங்கிலத்திலும் விடையளிக்கலாம் என்று அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

புதுமனை புகுவிழா

திருநெல்வேலி நகராட்சி உறுப்பினரும் தி. மு. க. பொதுக் குழு உறுப்பினருமான டாக்டர் பி. பத்மநாபன் அவர்களின் புதுமனை ('முத்தகம்') புகுவிழா, 3—6—68 காலை 10 மணியளவில், தெற்கு மவுண்ரோடு, சாமியார் தைக்காத் தெருவில் நடைபெறும்; நெல்லை மாவட்ட தி. மு. க. செயலாளர் எம். எஸ். சிவசாமி தலைமையில் சட்டப் பேரவைத் தலைவர் திரு. சி. பா. ஆதித்தனார், புதிய இல்லத்தைத் திறந்துவைப்பார்.

சான்றிதழுடன் வேலை வாய்ப்பை அறியவும் தகவல்

எஸ்.எஸ்.எல்.சி. தேறியவருக்கு அரசு செய்துள்ள ஏற்பாடு

சென்னை, மே 31—

"இவ்வாண்டில் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு எழுதியவர்களில் 52.4 சதவிகிதம் பேர் வெற்றி பெற்றுள்ளனர்; ஆனால் கடந்த ஆண்டில், 51.5 சதவிகிதம் பேர்களே தேறினர்.

"மார்ச் திங்களில் நடைபெற்ற இத்தேர்வில் மொத்தம் 2,05,000 பேர் தேர்வு எழுத அனுமதிக்கப்பட்டிருந்தனர்; இவர்களில் 1,87,594 பேர் எல்லாப் பாடங்களிலும் தேர்வு எழுதினர்; எஞ்சியவர்களில் ஒரு சிலர் தேர்வு எழுதவில்லை; ஏனையோர் ஒன்றிரண்டு பாடங்களில் மட்டும் தேர்வு எழுதினர்."

இவ்வாறு கல்வியமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் அறிவித்துள்ளார். அவர் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:—

"எஸ். எஸ். எல். சி. தேறியவர்களுக்கு உள்ள வேலைவாய்ப்புகள் பற்றிய முழுத் தகவலையும் விவரிக்கும் ஏடு ஒன்று, சான்றிதழ்ப் புத்தகங்களுடன் இணைத்து அனுப்புமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

"குறைந்த அளவில் 30,000 பேர் மேல் படிப்புக்குச் செல்ல மாட்டார்கள் என்று வைத்துக்கொண்டால்கூட, தோராயமாக 70,000 பேர் புகுமுக (பி.யு.சி.) வகுப்பில் சேருவதற்கு இடம் தேடக்கூடும்.

"கடந்த ஆண்டில் புகுமுக வகுப்பில் 56,000 இடங்கள் இருந்தன; இந்த ஆண்டில் புதிதாக 8 அல்லது 10 கல்லூரிகள் ஏற்படும்; இவற்றில் அரசுக் கல்லூரிகள் நான்கு ஆகும்.

"இந்தப் புதிய கல்லூரிகளில் சுமார் [illegible] இடங்கள் கிடைக்[illegible]ர்பார்க்[illegible]

[illegible]சப்படுகிறது; இந்[illegible] எப்படிச் சமாளிப்பது எ[illegible] பற்றிப் பல்கலைக் கழக [illegible]காரிகளும் அரசினரும் வி[illegible]வில் ஆலோசிக்கக்கூடும்"

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

அமைச்சர் கருணாநிதி

45-வது பிறந்த நாள் விழா

3--6--68 காலை 9-மணியளவில்
சென்னை மவுண்ட் ரோடு பாலர் அரங்கில்

தலைமை வகித்து மலர் வெளியிடுபவர்: முதலமைச்சர்

அறிஞர் அண்ணா

சிறப்புரை: பொது நலத்துறை அமைச்சர்

எஸ். ஜே. சாதிக் பாட்சா

வாழ்த்துரை:

ம. பொ. சிவஞானம் எம்.எல்.ஏ. — ஏ. கே. ஏ. அப்துஸ் சமது எம்.ஏ., எம்.பி.
எஸ். எஸ். மாரிசாமி எம்.பி. — இராஜேசுவரி நடராசன்

முதல் மலரைப் பெறுபவர்: சட்டப் பேரவைத் தலைவர்

சி. பா. ஆதித்தனார்

பொன்னாடை போர்த்துபவர்: புரட்சி நடிகர்

எம். ஜி. இராமச்சந்திரன் எம்.எல்.ஏ.

கவியரங்கத் [illegible]ர்: உள்ளாட்சித் துறை அமைச்சர்

மா. முத்துசாமி

கவியரங்கில் பங்குபெறும் கவிஞர்கள்:

புலவர் பொன்னிவளவன்	[illegible]ாசக[illegible]
மாணிக்கவாசகம்	[illegible]
ஔவை நடராசன்	[illegible]
கா. வேழவேந்தன்	[illegible]
கதிரவன்	புல[illegible]
கொத்தமங்கலம் சுப்பு	ஆனா[illegible]

விழா [illegible]

அன்னை பதிப்பகம், சென்னை-15 — மீ. சு. இளமுரு[illegible], அன்பில் தர்மலிங்[illegible]

குளித்தலை தமிழ் கா. சு. நூல் நிலையத்தாரால் சேகரிக்கப்பட்ட முன்னூறுக்கு மேலான திருக்குறள் தொடர்புடைய நூல்கள் கண்காட்சியில் வைக்கப்படும்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★